

விருதுநகர் அருப்புக்கோட்டையில் உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரி மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை வழங்கும் விழாவினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் துவக்கி வைத்தார். உடன் நகர் மன்றத் தலைவர் சுந்தரலட்சுமி சிவப்பிரகாசம், முன்னாள் சேர்மன் சுப்பாராஜ், முன்னாள் நகர் மன்றத் தலைவர் சிவப்பிரகாசம், நகரச் செயலாளர் ஏ.கே.மணி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அமைப்பாளர் சோலையப்பன் ஆகியோர் இருந்தனர்.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் தொகுதி வடக்கு மற்றும் தெற்கு ஒன்றியம் சார்பில் திராவிட பொங்கல் சமூக நீதிக்கான கபடி போட்டி புதுப்பட்டியில் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. துவக்கி வைத்தார். உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ., வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம்.பாண்டியன், மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் ராஜசேகரன், வடுகபட்டி பேரூராட்சி தலைவர் நடேசன் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்

### திருவண்ணாமலை தூய்மை அருணை சார்பில்

# மாதந்தோறும் கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு விழா!

## உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் பரிசுப் பெட்டகங்கள் வழங்குகிறார்!

திருவண்ணாமலை, ஜன. 10 -

திருவண்ணாமலை தூய்மை அருணை அமைப்பு சார்பில், தூய்மைப்பணி மரம் நடுதல், நீர் நிலை பராமரித்தலோடும், மாதந்தோறும் கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு விழா நடத்தப்பட்டுவருகிறது. தமிழ்நாடு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் பரிசு பெட்டகங்கள் வழங்கி வாழ்த்துரை வழங்குகிறார்.

திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக்கணக்கானோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

அதனை தொடர்ந்து மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழாவை கடந்த ஜூலை மாதம் பொதுப்பணித்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

13.01.2026 செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு, திருவண்ணாமலை, காந்தி நகர் பைபாஸ் சாலையில் உள்ள நகர்ப்புற அருணை மருத்துவமனை வளாகத்தில், தூய்மை அருணை சார்பில், கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடைபெறவுள்ளது.

விழாவிற்கு அருணை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் குணசிங் தலைமை வகிக்கிறார்.

அருணை கல்விக்குழுமங்களின் துணைத் தலைவர் எ.வ.வே.குமரன், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சி.இ.ஒ.பேராசிரியர் அசோக் தியாகராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தூய்மை அருணை மேற்பார்வையாளர் டாக்டர் எ.வ.வே.கம்பன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

விழாவில் கலந்து கொண்டு தமிழ்நாடு உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் அவர்கள், கர்ப்பிணிப் பெண்களுக்கு பட்டுச்சேலை, இனிப்புகள், தின்பண்டங்கள் மற்றும் மங்கலப்பொருட்கள் அடங்கிய பெட்டகங்களை வழங்கி வாழ்த்திப் பேசுகிறார்.

நிறைவாக தூய்மை அருணை மேற்பார்வையாளர் ப.கார்த்திவேல்மாறன் நன்றி கூறுகிறார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்பார்வையாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, இரா.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, பிரியா ப.விஜயரங்கன், இல.குணசேகரன் ஆகியோர் செய்து வருகின்றனர்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் -1049 நபர்களுக்கு நல உதவிகள்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. சிறப்புரை! மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் அறிவிப்பு!

கன்னியாகுமரி, ஜன. 10-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக தலைவர், முதலமைச்சர் அவர்களின் "திராவிட மாடல்" அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம்" மற்றும் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நாகர்கோவில் மாநகர கிழக்கு மண்டலத் தலைவர்



கு.அகஸ்டினா கோகிலவாணி ஏற்பாட்டில் 1049 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (11.01.2026 - ஞாயிறு) மாலை 5.00 மணிக்கு நாகர்கோவில், ஏ.ஆர். கேம்ப் சாலையில் எனது தலைமையில் நடைபெறவுள்ளது.

சிறப்பு விருந்தினராக கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நலத் திட்ட உதவிகளை வழங்க உள்ளார்.

ஆகவே, இந்த மாபெரும் சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்ட கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### ரூ.13 கோடியில் 4,25 லட்சம்

# குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகை!

## மாவட்ட ஆட்சியர் பொற்கொடி - சி.எம்.துரை.ஆனந்த் வழங்கினர்!

சிவகங்கை, ஜன.10–

தமிழ்நாடு முதல்வர் அவர்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூபாய் 3000 பொங்கல் தொகை, பொங்கல் பரிசாக வழங்கப்படும் என்று அறிவித்தார். அதனை ஒட்டி நேற்று 8ம்தேதி சென்னை ஆலந்தூரில் தமிழக முதல்வர் அவர்கள் இத்திட்டத்தை துவக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து இத்திட்டம் மாவட்டம் தோறும் பொங்கல் பரிசு தொகை வழங்கப்பட்டது. இதில் சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை நகர் 27வது வார் டு இந்திரா நகர் நியாயவிலைகடையில் மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி தலைமையில் சிவகங்கை நகர்மன்ற தலைவர் சி.எம்.துரை.ஆனந்த் ரூபாய் 3000 ரொக்க பணம் ,ஒரு கிலோ பச்சரிசி,1 கரும்பு,ஒரு கிலோ சர்க்கரை, மற்றும் வேட்டி, சேலை ஆகியவற்றை வழங்கினார். மாவட்டத்தில் 4, லட்சத்து 19,355 குடும்ப அட்டை தாரர்களுக்கு ரூபாய் 12 கோடியே 57லட்சத்து 355, மற்றும் வேட்டி சேலைகள், பொங்கல் பொருட்கள் ஆகியவை வழங்கப்பட்டது. இதில் 1060 இலங்கை தமிழர்களுக்கும் சேர்த்து வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கூட்டுறவு மண்டல இணைப்பதிவாளர் ராஜேந்திர பிரசாத், ஆர்.டி.ஓ. ஜெபிகிரேசியா, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் பொது.விஜயகுமார், நகர் மன்ற உறுப்பினர்கள் எஸ்.ஜெயகாந்தன் மதியழகன்,மாவ ட்ட கழக செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான்,நகர கழக நிர்வாகிகள் சேகர், முருகேசன், சகாபுதீன், மகளிர் அணி ராஜேஸ்வரி, மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் தமிழ் பிரியா மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள். மாவட்டத்தில் 829 நியாய விலை கடைகள் முலம் இந்த பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.வருகிற 14ஆம் தேதி வரை டோக்கன் மூலம் மாவட்டத்திலுள்ள 4 லட்சத்து 19,355 குடும்ப அட்டடைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகை பொருட்கள் வழங்கப்பட உள்ளது.



தேனி மாவட்டம் தேனி அல்லிநகரம் நகராட்சி உட்பட்ட வேளாண் விலை பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்க நியாய விலை கடையில் மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்சித் சிங் தலைமையில் தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. முன்னிலையில் அரிசி அட்டை குடும்பதாரர்களுக்கு ஒரு கிலோ சர்க்கரை ஒரு கிலோ பச்சரிசி ஒரு முழு கரும்பு மற்றும் 3000ரொக்க தொகையுடன் பொங்கல் பரிசு வழங்கினார்கள். உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ., பி.சி. பட்டி பேரூராட்சி தலைவர் மிதின் சக்கரவர்த்தி மற்றும் அரசு அதிகாரிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.


# 49வது சென்னைப் புத்தகக் காட்சி

# "கலைஞர் கருவூலம்"

## விற்பனைக் கூடத்தில்

# தலைமைக் கழக வெளியீடுகள்

49வது சென்னைப் புத்தகக் காட்சி, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் (நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி அருகில்) 2026 ஜனவரி 8 முதல் ஜனவரி 21 வரை நடைபெறுகிறது.

புத்தகக் காட்சி அரங்கில், அரங்கு எண்: 279ல் அமைந்துள்ள "கலைஞர் கருவூலம்" விற்பனைக் கூடத்தில் திராவிட இயக்க நூல்கள் உள்ளிட்ட தலைமைக் கழக வெளியீடுகள் விற்பனைக்கு கிடைக்கும்.

தலைமைக் கழகம்,
தி.மு.க.





முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. மகளிரணி, மகளிர் தொண்டரணி சார்பில் வள்ளியூர் மாவட்ட கழக அலுவலகத்தில் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் மாநில பிரச்சார குழு செயலாளர் ஜெஸி பொன்ராணி, நெல்லை கிழக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மல்லிகா அருள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் இல்லம் தோறும் சமத்துவம் பொங்கட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் என எழுதி கோலமிட்டு திராவிட பொங்கல் கொண்டாடுவது என்று முடிவு செய்யப்பட்டது. நிகழ்வில் மாவட்ட மகளிர் அணி தலைவர் கமல நேரு, துணைத் தலைவர் வழக்கறிஞர் ஜெனிபர், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் வள்ளி, கௌரி, ஐஸ்வர்யா சக்திவேல், மாவட்ட மகளிரணி துணைத் தலைவர் சந்திரகலா, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் பரிமளம் பொன் இசக்கியம்மாள், பிரேமா உட்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி வடக்கு மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி, விளாத்திகுளம் ஒன்றிய,பேரூர் தி.மு.க. சார்பில் திராவிட பொங்கலை முன்னிட்டு,கிரிக்கெட் விளையாட்டு போட்டியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி.மார்க்கண்டேயன் துவக்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, அன்புராஜன், இமானுவேல், நவநீதக்கண்ணன், காசிவிஸ்வநாதன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.